**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31/19 PW.106**

Name : திரு. கார்த்திகை செல்வன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 28th July 2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதிய தலைமுறை தொலைக்காட்சியில் தலைமை நிர்வாக ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ம் ஆண்டும் புதிய தலைமுறை தொலைக்காட்சியில் இதே பதவியில்தான் இருந்தேன். மேற்படி தொலைக்காட்சியின் மொத்த செய்திபிரிவும் எனது நிர்வாகத்தில் வரும். செய்திபிரிவும் மற்றும் செய்திகளை தொகுத்து வழங்குவதும், நேர்படபேசு என்ற விவாத நிகழ்ச்சியிலும், அக்கினி பரிட்ச்சை என்ற நேர்காணல் நிகழ்ச்சியிலும் நான் நெறியாளராக பங்கேற்று வருகிறேன். அதில் நேர்படபேசு என்ற விவாத நிகழ்ச்சி மட்டும் நேரலையாக ஒளிபரப்பு செய்வோம். நாமக்கல் மாவட்டத்தில் கோகுல்ராஜ் என்பவரது மரணம் மற்றும் துணை கண்காணிப்பாளர் விஷ்ணுபிரியாவின் தற்கொலை, சம்மந்தமாக 2015 ஆம் ஆண்டு எங்கள் தொலைக்காட்சியில் 10.10.2015 அன்று நேர்பட பேசு நிகழ்ச்சியை நான் தொகுத்து வழங்கினேன். அந்த நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற IPS அதிகாரி திருமதி. திலகவதி அவர்கள், அப்போதைய அதிமுக கட்சி பிரதிநிதியாக அதன் ஊடக பிரிவு பேச்சாளர் C.R. சரஸ்வதி, சமூக செயல்பாட்டாளர் ஓவியா, வழக்கறிஞர் சுதா ஆகியோர்களை விருந்தினர்களாக அழைத்திருந்தோம். அன்றைய தினம் மேற்படி நிகழ்ச்சி தொடங்குவதற்கு சற்று முன்பாக இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட யுவராஜ் நேரலலையில் பங்கு கொள்ள விரும்புவதாக என் அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னார்கள். அந்த நிகழ்ச்சியில் அவர் வீடியோ கால் மூலம் இணைந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் வீடியோ காலில் நான் யுவராஜை பார்த்தன்மூலம் அவரை என்னால் அடையாளம் காட்டமுடியும். அவர் குற்றவாளி கூண்டில் முதலாவதாக உட்கார்ந்திருக்கும் நபர் ஆவார் (1 ஆம் எதிரி யுவராஜ் குற்றவாளி கூண்டில் முதலாவதாக அமர்ந்திருக்கிறார்). மேற்படி நிகழ்ச்சி வழக்கமாக நேரலையாக இரவு 9 மணிக்கு ஆரம்பமாகும். அன்றைய தினம் 2 நிமிடம் முன்பாக இரவு 8.58 க்கு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி 1 மணி நேர நிகழ்ச்சியாகும். அன்றைய தினம் இரவு 10 மணிக்கு அந்நிகழ்ச்சி நிறைவுற்றது. அந்த நிகழ்ச்சியில் 1 ஆம் எதிரி யுவராஜ் வீடியோ காலில் நேரடியாக இந்த வழக்கு சம்மந்தமாக அவரது விளக்கங்களை கூறினார். நானும் அவரிடம் குறுக்கு கேள்விகள் கேட்டு அதற்கு அவர் பதில் அளித்தார். அந்த நிகழ்வு உலகம் முழுவதும் நேரலையாக எங்கள் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டது. பொதுவாக எங்கள் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகும் அனைத்து

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

நிகழ்வுகளும் உடனடியாக பதிவு செய்யப்படும். 10.10.2015 அன்று இரவு 8.58 முதல் இரவு 10 மணிவரை புதிய தலைமுறை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நேர்பட பேசு நிகழ்ச்சி அடங்கிய குறுந்தகடு ஆஜர் செய்கிறேன். மேற்படி குறுந்தகடு நகல் என்னால் எடுக்கப்பட்டது. மேற்படி குறுந்தகடு அசாஆ 549 ஆகும். அது சம்மந்தமாக நான் வழங்கிய சான்றிதழ் அசாஆ 550 ஆகும் (அசாஆ 549 குறுந்தகடு திறந்த நீதிமன்றத்தில் திரையில் இருதரப்பு முன்னிலையிலும் இயக்கி காட்டப்பட்டது).

**குறுக்கு விசாரணை (1 முதல் 15 எதிரிகள் தரப்பில்)**

சென்னையில் உள்ள SRM குழுமத்திற்கு பச்சை முத்து என்ற பாரிவேந்தர் என்பவர்தான் நிறுவனர் என்றால் சரிதான். ரவி பச்சை முத்து அவரது மகன் என்றால் சரிதான். SRM Group, New Jen Media Corporationக்கும் புதிய தலைமுறை தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் நேரடி தொடர்பு கிடையாது. புதிய தலைமுறை நிறுவனர் திரு. சத்தியநாராயணன் என்பவர் ஆவார். திரு. சத்தியநாரயணன் என்பவர் திரு. பச்சை முத்து என்பவரின் மகன் ஆவார். திரு. பச்சைமுத்து என்பவர் இந்திய ஜனநாயக கட்சியின் தலைவர் என்றால் சரிதான். செய்தியாளர் என்ற முறையில் அந்த விவரம் தெரியும். 2019 ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் திரு. பச்சை முத்து அவர்கள் திராவிட முன்னேற்ற கழக கூட்டணியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த தேர்தல் கூட்டணியில் விடுதலை சிறுத்தை கட்சியும் இருந்தது என்றால் சரிதான். விடுதலை சிறுத்தை கட்சி பட்டியல் இனத்தவருக்கான கட்சி என்றால் அவர்களையும் சேர்த்து எல்லோருக்குமான கட்சியும் ஆகும். அது பட்டியல் இனத்தவருக்கான கட்சிதான் என்றாலும் அந்த விவரத்தை வேண்டும் என்றே நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நேர்பட பேசு நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பது மற்றும் நடத்துவது நான்தான். அந்த மேற்படி நிகழ்ச்சிக்கும், நிர்வாகத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை, நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பது எனது தன்னிச்சையான மற்றும் ஏகோபித்த முடிவாகும். அதில் நிர்வாகம் தலையிடுவது இல்லை. மேற்படி நிகழ்ச்சியில் கட்சி சார்ந்த நபர்களும் பங்கேற்றுள்ளார்கள். மேற்படி நிகழ்ச்சி நான் ஒருங்கிணைப்பதற்கு முன்பு யுவராஜ் என்பவர் போலீசாரால் தேடப்பட்டு வரும் நபர் என்பது எனக்கு தெரியும். போலீசாரால் தேடப்படும் நபருடன் தொடர்பு கொள்ளும்போது போலீசாருக்கு தகவல் சொல்லவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது, ஆனால் நிகழ்ச்சி நேரலையாக சென்றுகொண்டிருந்ததால் என்னால் தகவல் சொல்லமுடியவில்லை. மேற்படி நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்பு யுவராஜ் உடன் தொடர்பு கொள்ள போவது பற்றி தெரியாது, நிகழ்ச்சி ஆரம்பித்தபிறகுதான் தெரியும். எங்கள் தொலைக்காட்சியில் தொழில்நுட்ப பிரிவு தனியாக உள்ளது. பொதுவாக நிகழ்ச்சிகள் சம்மந்தமாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுப்பது எங்கள் தொலைக்காட்சி தொழில்நுட்ப பிரிவினர்தான். மேற்படி நேரலை ஆரம்பிப்பதற்கு முன்பு எங்கள் நிறுவனத்தில் ஏற்கனவே யுவராஜ் குறித்த நேர்காணலை நான் பார்த்தேன். அதற்கு முன்பாக இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சிசிடிவி Footage எங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது எனக்கு தெரியும். அதற்கான பதிவுகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. அந்த பதிவுகளை செய்தி வெளியாகும்போது பார்த்தேன். மேற்படி

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

சிசிடிவி Footage எங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை. யுவராஜ் என்பவரின் நேர்காணல் 04.10.2015 அன்று எங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. 1 வது எதிரி யுவராஜ்க்கும் எனக்கும் நேரடி தொடர்பு கிடையாது. இன்று இந்நீதிமன்றத்தில்தான் அவரை நேரடியாக பார்த்தேன். 04.10.2015 அன்று ஒளிபரப்பட்ட நேர்காணலை நான் பார்த்தேன். அந்த ஒளிபரப்பில் யுவராஜை வீடியோ காட்சியாக பார்த்தேன். 04.10.2015 அன்று நேர்காணல் நடக்கும்போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் பதில்கள் அடங்கிய பதிவு எங்களிடம் உள்ளது. 10.10.2015 அன்று நேர்படபேசு நிகழ்ச்சியில், 04.10.2015 அன்று நடந்த நேர்காணல் தொடர்புடைய கேள்விகளும் விவாதிக்கப்பட்டது. நேர்காணல் செய்யப்படும் நிகழ்ச்சிகள் எங்கள் தொலைக்காட்சியில் தொழில்நுட்ப அறையில் பதிவாகிறது என்றால் சரிதான். அங்கிருந்து நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் என்றால் சரிதான். அந்த பதிவுகள் 90 நாட்கள்தான் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி நேர்காணல் சம்மந்தமாக போலீசார் என்னை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை எதுவும் செய்யவில்லை. ஆனால் போலீசார் நிகழ்ச்சி முடிந்தவுடன் நாங்கள் யுவராஜை தேடிவருகிறோம், அவர் எங்கிருக்கிறார் என்று தெரியுமா என்று என்னிடம் கேட்டார்கள். அது தவிர நிகழ்ச்சி தொடர்பான பேச்சு பரிவர்த்தனை குறித்து போலீசார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. 10.10.2015 அன்று நடைபெற்ற நேர்படபேசு நிகழ்ச்சியின் தொகுப்பை போலீசார் எங்கள் தொலைக்காட்சி செய்தி தயாரிப்பு பிரிவில் இருந்து பெற்றுக்கொண்டார்கள். செய்தி தயாரிப்பு பிரிவில் இருந்து போலீசார் நிகழ்ச்சி தொகுப்பை பெற்றுக்கொண்டது எனக்கு நேரடியாக தெரியாது, ஆனால் அது சம்மந்தமாக எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு எனது அனுமதியின்பேரிலேயே வழங்கப்பட்டது. போலீசார் மேற்படி நிகழ்ச்சி தொகுப்பை எங்கள் சென்னை அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதை தவிர எங்கள் அலுவலகத்திற்கு வந்து வேறு ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை. எங்கள் திருச்செங்கோடு அலுவலகத்தை போலீசார் சோதனை செய்தார்கள், சோதனை நடந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எங்கள் திருச்செங்கோடு அலுவலகத்தில் இருந்து சோதனை பற்றி தகவல் சொன்னார்கள். பொதுவாக Hard Disk ஐ எங்கும் எடுத்துச்செல்லலாம் என்றால் சரிதான். Hard Disk இல் இருந்து நேரடியாக நகல் DVD ல் எடுக்கமுடியாது. Hard Disk ஐ கணிணியில் பொருத்திதான் நகல் எடுக்கமுடியும் என்றால் சரிதான். பச்சைமுத்து மற்றும் அரசியல் வாதிகள், மற்றும் வழக்கறிஞர், பட்டியல் இனத்தை சேர்ந்த முக்கியஸ்தர்கள் மற்றும் போலீசாரின் நிர்பந்ததினாலும், சிசிடிவி Footage, மற்றும் வீடியோ பதிவுகளை உண்மைக்கு புறம்பாக தயாரித்து இந்த வழக்கில் நிர்பந்தத்தின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அதனை நான் கடுமையாக மறுக்கிறேன். அது என் செய்தியாளர் பணிக்கு உள்நோக்கம் கற்பிப்பதுதாகும். அசாஆ 550 சான்றிதழில் " So we will be moving all content to Western digital 2 TB Hard Disk" என்று கூறியிருப்பது தவறானது என்றாலும் அவ்வாறு பதிவிறக்கம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :**
இல்லை

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com